**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : மலர்விழி**

**தேதி 08.08.2025** **நேரம் மாலை 6.10 மணி**

---

தலைப்புச் செய்திகள்

மரக்காணம்-புதுச்சேரி **4 வழி** நெடுஞ்சாலைத் திட்டத்திற்கு, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

பல்வேறு மாநிலங்களுக்கான மின்னணு வாக்காளர் பட்டியல்கள், இணைய தளத்தில் இருந்து நீக்கப் பட்டுள்ளதாக கூறுப்படுவதை, தேர்தல் ஆணையம் மறுத்துள்ளது.

மாநிலங்களுக்கான **சாஸ்கி** சிறப்பு நிதி உதவித் திட்டத்தின் கீழ், புதுச்சேரி அரசு, மத்திய அரசிடம் கோரிய 200 கோடி ரூபாய் நிதி உதவிக்கு, மத்திய நிதியமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.

புதுச்சேரி அரசு, மொத்தம் 4ஆயிரத்து 750 கோடி ரூபாய்க்கு, **ஆசிய வளர்ச்சி வங்கி**யிடம், **கடன் அனுமதி** பெற்றுள்ளது.

------------------------

அமைச்சரவை 1 (7)

மரக்காணம்-புதுச்சேரி **4 வழி** நெடுஞ்சாலைத் திட்டத்திற்கு, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இந்த 46 கிலோ மீட்டர் நெடுஞ்சாலைத் திட்டம், 2 ஆயிரத்து 157 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் என்று, மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. அஷ்விணி வைஷ்ணவ் இன்று, புதுடெல்லியில், செய்தியாளர் கூட்டம் ஒன்றில் தெரிவித்தார். மத்திய அமைச்சரவையின் இதர முடிவுகள் குறித்து ஒரு செய்தித் தொகுப்பு....

**(வாய்ஸ்)**

*அமைச்சரவை* 2 (9)

**(வாய்ஸ்)**

பல்துறை தொழில்நுட்பக் கல்வி, மற்றும் ஆராய்ச்சிக்கான MERITE திட்டத்தை, 4 ஆயிரத்து 200 கோடி ரூபாய் பட்ஜெட் ஆதரவு மூலம் செயல்படுத்த, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. வீட்டு உபயோகத்திற்கான சமையல் எரிவாயுவை, சலுகை விலையில் வழங்குவதற்கான 30 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஆதரவு, மற்றும், பிரதமரின் உஜ்வாலா திட்டப் பயனாளிகளுக்கு, மானியம் வழங்குவதற்கான 12 ஆயிரத்து 60கோடி ரூபாய் நிதி ஆதரவு உத்தேசங்களுக்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்து இருப்பதாக, அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

------------------------

*மோடி-ஜம்மு (9)*

ஜம்மு-காஷ்மீரில், ஸ்ரீமாதா வைஷ்ணவ தேவி கோவிலுக்கு செல்லும் பக்தர்களுக்கான, கத்ரா-அம்ரித்ஸர்-கத்ரா, வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரயிலை, பிரதமர் திரு. நரேந்திர மோடி, வரும் 10ஆம் தேதி மெய்நிகர் முறையில் கொடியசைத்து தொடக்கி வைக்கிறார். செவ்வாய்க் கிழமை தவிர, இதர நாட்களில் இயங்கும் இந்த ரயில், ஜம்மு,பதான்கோட், ஜலந்தர் உள்ளிட்ட இடங்களில் நின்று செல்லும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. இதற்கிடையே, காஷ்மீர் பள்ளத்தாக்கில், பொருளாதார செயல்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில், வடக்கு ரயில்வே, அனந்தநாக் ரயில் நிலையத்தை, சரக்குப் போக்குவரத்துப் பணிகளுக்கு திறந்து விட்டுள்ளது.

------------------------

*நாடாளுமன்றம்* (9)

பீகார் மாநில **சிறப்பு தீவிர** வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள் பற்றிய பிரச்சனை தொடர்பாக, நாடாளுமன்றத்தில் இன்றும், எதிர்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால், இரு அவைகளிலும், அலுவல்கள் பாதிக்கப்பட்டன. மாநிலங்களவை, முதலில் 12 மணி வரையிலும், பின்னர் நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டது. மக்களவையில் அலுவல்கள்,

முதலில் இருமுறையும், பிற்பகல் 3 மணிக்கு மேல், நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டன. முன்னதாக இன்று காலை இரு அவைகளிலும், வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கேற்ற விடுதலை போராட்ட வீரர்களுக்கு புகழஞ்சலி செலுத்தப்பட்டது.

------------------------

தேர்தல் ஆணையம் (7)

பல்வேறு மாநிலங்களுக்கான மின்னணு வாக்காளர் பட்டியல்கள், இரவோடு இரவாக இணைய தளத்தில் இருந்து நீக்கப் பட்டுள்ளதாக, சமூக ஊடகங்களில் பரவி வரும் தகவலை, தேர்தல் ஆணையம் மறுத்துள்ளது. இது முற்றிலும் பொய்யான தகவல் என்றும், அனைத்து 36 மாநிலங்கள், மற்றும், யூனியன் பிரதேசங்களுக்கான வாக்காளர் பட்டியலை, எவர் வேண்டுமானாலும் இணைய தளத்தில் இருந்து, பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்றும், ஆணையம் கூறியுள்ளது.

------------------------

கட்கரி (13)

இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில், போக்குவரத்து செலவுகளின் விகிதம், இவ்வாண்டு இறுதிக்குள், 9 சதவிகிதமாக குறையும் என்று, மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி கூறியுள்ளார். நாட்டில் சாலை கட்டமைப்பு வசதிகள், கணிசமாக மேம்பட்டு உள்ளதே, இதற்கு காரணம் என்றும், அவர் தெரிவித்துள்ளார். தனியார் செய்தி அலைவரிசை ஒன்றின் ஏற்பாட்டில், புதுடெல்லியில் இன்று நடைபெற்ற மாநாட்டில் உரையாற்றிய அவர், போக்குவரத்து செலவு குறைவதால், ஏற்றுமதித் துறை முக்கியமாக பயன்பெறும் என்றும், நாட்டின் ஏற்றுமதி, ஒன்றரை மடங்கு அதிகரிக்கும் என்றும், கூறினார். வேளாண்சார் துறைகளின் மேம்பாட்டிற்கு, அரசு உயர் முக்கியத்துவம் அளிப்பதாக, அமைச்சர் திரு. கட்கரி தெரிவித்தார். இத்துறையின் வளர்ச்சியினால், மொத்த உள்நாட்டு உற்பத்தி, கணிசமாக அதிகரிக்கும் என்றும் அவர் கூறினார்.

------------------------

திறன் மேம்பாடு (7)

பொருளாதாரத்தை வலுப்படுத்த, இளைஞர்களின் திறன் மேம்பாட்டில் அதிக முதலீடுகள் அவசியம் என்று, மத்திய திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. ஜெயந்த் சௌத்ரி கூறியுள்ளார். ஃபிக்கி தொழில்-வர்த்தக கூட்டமைப்பு சார்பில், புதுடெல்லியில் இன்று நடைபெற்ற உலக திறன்கள் மாநாட்டில் பேசுகையில், அவர் இவ்வாறு கூறினார். நிகழ்ச்சியின் போது, உலகத் திறன்கள் அறிக்கை, மற்றும், ஐடிஐ-தொழிற்பயிற்சி நிறுவனங்களின் தரவரிசைப் பட்டியலை அமைச்சர் வெளியிட்டார்.

------------------------

சுகாதார இயக்கம் (12)

அறிவியல் மற்றும் பொது சுகாதாரத் துறையில் மாணவர்கள் ஈடுபடுவதை ஊக்குவிக்க, இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம், மத்திய அரசின் சுகாதார ஆராய்ச்சித் துறையுடன் இணைந்து, SHINE என்ற பெயரில் இன்று நாடு முழுவதும், மாணவர் தொடர்பு இயக்கம் ஒன்றை நடத்தியது. 16 மாநிலங்கள், மற்றும் யூனியன் பிரதேசங்களில், 300க்கும் மேற்பட்ட பள்ளிகளில், 9 முதல், 12ஆம் வகுப்பு பயிலும் மாணவர்கள், இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தின் ஆய்வகங்களுக்கு அழைத்து செல்லப்பட்டு, ஆராய்ச்சிப் பணிகள், வீடியோ விளக்கங்கள், மற்றும், நேரடி செயல்முறைகளை பார்வையிட்டனர். மாணவர்கள் இடையே, அறிவியல் ஆர்வம், மற்றும், புதுமையாக்க உணர்வை அதிகரித்து, அடுத்த தலைமுறை ஆராய்ச்சியாளர்களாக மேம்படுத்த இத்திட்டத்தினால் ஏதுவாகும் என்று, ஐசிஎம்ஆர் தலைமை இயக்குநர் டாக்டர் ராஜீவ் பஹல் கூறினார்.

------------------------

புதுச்சேரி மானியம் 1 (4)

மாநிலங்களின் மூலதனச் செலவினங்களுக்கான மத்திய அரசின் சாஸ்கி சிறப்பு நிதி உதவித் திட்டத்தின் கீழ், புதுச்சேரி அரசு, மத்திய அரசிடம் கோரிய 200 கோடி ரூபாய் நிதி உதவிக்கு, மத்திய நிதியமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது. இது குறித்து ஒரு செய்தித் தொகுப்பு.....

**(வாய்ஸ்)**

புதுச்சேரி மானியம் 2 (16)

**(வாய்ஸ்)**

மத்திய அரசால் அனுமதிக்கப் பட்டுள்ள 200 கோடி ரூபாய் நிதி உதவியில் முதல்கட்டமாக 14 பணிகள், 129 கோடி ரூபாய் செலவில், விரைவில் மேற்கொள்ளப்பட்டு, வரும் மார்ச் மாதத்திற்குள் நிறைவேற்றி முடிக்கப்படும் என்று, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று புதுச்சேரியில் செய்தியாள்களிடம் தெரிவித்தார். எஞ்சிய தொகையை பெற ஏதுவாக, திட்டங்களுக்கான புதிய செலவுப் பட்டியலை சமர்பிக்கவும், நிதியமைச்சகம் புதுச்சேரி அரசுக்கு அறிவுறுத்தி உள்ளதாக அவர் கூறினார்.

நிதி அமைச்சகத்தால் சிறப்பு நிதி உதவி அனுமதிக்கப் பட்டுள்ள திட்டங்களில், காமராஜர் சாலை, மற்றும், மறைமலையடிகள் சாலைக்கு இடையே, உப்பனாற்று வடிகால் மீது மேம்பாலம் கட்டி முடிக்கும் பணிகளும், ஆன்மீக-கலாச்சார சுற்றுலாத் தலங்களுக்கு இடையிலான இணைப்புகளை மேம்படுத்தும் பணிகளும் அடங்கும்.

மத்திய அரசின் இந்த சிறப்பு நிதி உதவித் திட்டம், மாநிலங்களுக்கு மட்டுமே பொருந்தும் என, மத்திய அரசு அறிவித்து இருந்த நிலையிலும், முதலமைச்சர் திரு. ரங்கசாமி, தொடர்ந்து பல கடிதங்கள் மூலம் கோரிக்கை விடுத்து, யூனியன் பிரதேசமான புதுச்சேரிக்கு நிதி உதவி பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

------------------------

வங்கிக் கடன் (11)

புதுச்சேரி அரசு, மொத்தம் 4ஆயிரத்து 750 கோடி ரூபாய்க்கு, ஆசிய வளர்ச்சி வங்கியிடம், கடன் அனுமதி பெற்றுள்ளது. இந்த கடன் உதவி, அடுத்த 5 ஆண்டுகளில், 2 தவணைகளாக, சம்பந்தப்பட்ட பணிகளுக்கு கிடைக்கும் என, முதலமைச்சர் அலுவலகம், செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளது. கடல் நீரை குடிநீராக மாற்றும் ஆலை, குடிநீர் தேவைகளுக்காக, சங்கராபரணி, மற்றும் பெண்ணையாற்றில் தடுப்பணை, சாத்தனூர் அணையில் இருந்து குடிநீர் கொண்டு வருவதற்கான குழாய்ப்

பாதை, மற்றும், காரைக்கால், மாஹே-ஏனாம் பகுதிகளில், பல்வேறு வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள, இந்த கடன் உதவி பயன்படுத்தப்படும். 50 ஆண்டுகளில் திருப்பி செலுத்த வேண்டிய இந்த கடன், 3 முதல், 4 சதவிகித குறைந்த வட்டியில் பெறப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

------------------------

பிஆர்டிசி (10)

புதுச்சேரி சாலைப் போக்குவரத்துக் கழக ஊழியர்கள், இன்று முதலமைச்சருடன் நடைபெற்ற பேச்சு வார்த்தையில் உடன்பாடு எட்டப்பட்டதை தொடர்ந்து, வேலை நிறுத்தப் போராட்டத்தை விலக்கிக் கொண்டனர். இன்று சட்டமன்றத்தில், சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், எதிர்கட்சித் தலைவர் திரு. சிவா, சட்டமன்ற உறுப்பினர் திரு. நேரு ஆகியோர் முன்னிலையில், பிஆர்டிசி ஊழியர் பிரதிநிதிகள், முதலமைச்சர் திரு. ரங்கசாமியுடன் நடத்திய பேச்சு வார்த்தையின் போது, ஒப்பந்த ஊழியர் சம்பளத்தை 10 ஆயிரம் ரூபாய் உயர்த்தி வழங்கவும், நிரந்தர ஊழியர்களுக்கான அகவிலைப் படியை, படிப்படியாக உயர்த்தவும் முதலமைச்சர் உறுதி அளித்தார்.

------------------------

புதுச்சேரி நீர் விளையாட்டு (9)

புதுச்சேரியில் சுற்றுலாப் பயணிகளுக்கான நீர் விளையாட்டு, மற்றும், சாகச விளையாட்டு வசதிகளை வழங்க விருப்பமுள்ள படகு சவாரி இயக்குநர்களிடம் இருந்து, சுற்றுலாத் துறை, விண்ணப்பங்களை பெற்று, உரிய ஆய்வுகளுக்கு பின்னர், உரிமங்களை வழங்கி வருகிறது. படகு சவாரி செயல்பாடுகளை ஒழுங்குப்படுத்தும் வகையில், படகுகளுக்கு வண்ண அடையாளம் வழங்கவும் உத்தேசிக்கப் பட்டுள்ளது. உரிய வழிகாட்டு நெறிமுறைகளின் அடிப்படையில், அரசு ஒப்புதலுடன், படகுகளை இயக்குவதற்கான உரிமங்களை, இன்று சுற்றுலாத் துறை அமைச்சர் முன்னிலையில், முதலமைச்சர் திரு. ரங்கசாமி வழங்கினார்.

------------------------

*மணக்குள விநாயகர் (6)*

புதுச்சேரி மணக்குள விநாயகர் கோவிலில், பக்தர்களுக்கான முழுமையான குளிர்சாதன வசதிகளை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி, இன்று பூஜை செய்து தொடக்கி வைத்தார். யூகோ வங்கி வழங்கிய நிதி, பக்தர்களின் நன்கொடை, மற்றும், தேவஸ்தான நிதி மூலம், மொத்தம் 33 லட்சம் ரூபாய் செலவில், மணக்குள விநாயகர் கோவில் முழுவதிலும் குளிர்சாதன வசதி ஏற்படுத்தப் பட்டுள்ளது.

------------------------

*ஜிப்மர் போராட்டம் (8)*

புதுச்சேரி ஜிப்மர் நிர்வாகம், வேலை வாய்ப்பில் உள்ளூர் மக்களை புறக்கணிப்பதாக குற்றம் சாட்டியும், அலுவல் மொழியாக இந்தியை திணிக்கும் நிர்வாகத்தை கண்டித்தும், திமுகவினர் இன்று, ஜிப்மர் மருத்துவமனை முன்பாக, முற்றுகை போராட்டம் மேற்கொண்டனர். மாநில திமுக அமைப்பாளரும், எதிர்கட்சித் தலைவருமான திரு.ஆர். சிவா தலைமையில் நடைபெற்ற இப்போராட்டத்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. செந்தில் குமரன், திரு. கென்னடி, திரு. சம்பத், மற்றும், கட்சி நிர்வாகிகள்-தொண்டர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

------------------------

*வானிலை (12)*

**வளிமண்டல கீழடுக்கு மற்றும் மேலடுக்கு சுழற்சிகள்** காரணமாக, இன்றைய தினம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, வேலூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், நாகை, திருவாரூர் உள்ளிட்ட மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வரும் 14ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள தமிழக கடலோரப் பகுதிகள், வங்கக் கடல் பகுதிகள், மற்றும், அரபிக் கடல் பகுதிகளுக்கு, மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர். இதற்கிடையே, கடந்த 24

மணி நேரத்தில் அதிகபட்சமாக, ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு உள்ளிட்ட இடங்களில், 9 செ.மீ மழை பதிவாகி உள்ளது.

---

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

மரக்காணம்-புதுச்சேரி **4 வழி** நெடுஞ்சாலைத் திட்டத்திற்கு, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

பல்வேறு மாநிலங்களுக்கான மின்னணு வாக்காளர் பட்டியல்கள், இணைய தளத்தில் இருந்து நீக்கப் பட்டுள்ளதாக கூறுப்படுவதை, தேர்தல் ஆணையம் மறுத்துள்ளது.

மாநிலங்களுக்கான **சாஸ்கி** சிறப்பு நிதி உதவித் திட்டத்தின் கீழ், புதுச்சேரி அரசு, மத்திய அரசிடம் கோரிய 200 கோடி ரூபாய் நிதி உதவிக்கு, மத்திய நிதியமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.

புதுச்சேரி அரசு, மொத்தம் 4ஆயிரத்து 750 கோடி ரூபாய்க்கு, **ஆசிய வளர்ச்சி வங்கி**யிடம், **கடன் அனுமதி** பெற்றுள்ளது.